# தமிழர் கல்வி மேம்பாட்டுப் பேரவை
## TAMIL EDUCATION DEVELOPMENT COUNCIL

# அரையாண்டு – மதிப்பீட்டுத் தாள்

## 2021 – 2022

## தமிழ்மொழி

## வளர் தமிழ் 12

சுட்டெண்:............................................................ நேரம்: 180 மணித்துளிகள்

www.tamiledc.com

**1) தேர்விடை வினா - சரியான விடைக்குரிய எழுத்தின் கூட்டில் புள்ளடி இடுக.**

1. ஊர்காண் காதையில் தென்றல் வரவு பற்றிப் பாடியவர்

அ) பாவேந்தர் ☐ ஆ) இளங்கோவடிகள் ☐

இ) கபிலர் ☐ ஈ) கண்ணதாசன் ☐

2. மூவேந்தர்களின் ஒற்றுமையைச் சிதைத்தவர்கள்

அ) ஐரோப்பியர் ☐ ஆ) உரோமர் ☐

இ) ஆரியர் ☐ ஈ) சிங்களவர் ☐

3. கூறுங்கள் என்பது

அ) முன்னிலை ☐ ஆ) படர்க்கை ☐

இ) தன்மை ☐ ஈ) எழுவாய் ☐

4. 'கோதை மாதவி கொழுங்கொடி எடுப்ப
காவும் கானமும் கடிமலர் ஏந்த....' இப்பாடலில் கடிமலர் என்பது

அ) செழிப்பு ☐ ஆ) கூடல் ☐

இ) அல்லி ☐ ஈ) நறுமலர் ☐

5. கலிங்கத்துப்பரணி ____________ மன்னன் மீது பாடப்பட்டது.

அ) பல்லவ ☐ ஆ) சேர ☐

இ) சோழ ☐ ஈ) பாண்டிய ☐

6. செய்த என்ற பெயரெச்சத்தை வினையெச்சமாக மாற்றினால்

அ) செய் ☐ ஆ) செய்து ☐

இ) செய்கின்ற ☐ ஈ) செய்யும் ☐

7. நன்னூலை எழுதியவர்

அ) அகத்தியர் ☐ ஆ) தொல்காப்பியர் ☐

இ) பவணந்தி ☐ ஈ) பரணர் ☐

8. பின்வருவனவற்றுள் தமிழ்ச்சொல் அல்லாதது

அ) கலியாணம் ☐ ஆ) கதிரவன் ☐

இ) மகிழ்ச்சி ☐ ஈ) அறம் ☐

9. பல்லவர் தமிழகத்தைக் கைப்பற்றி ஆண்ட நூற்றாண்டு

அ) கி.பி 6 - 4 ☐ ஆ) கி.மு 6 - 9 ☐

இ) கி.பி 6 - 9 ☐ ஈ) கி.பி 9 - 10 ☐

10. போல, அன்ன, ஒப்ப என்பன

அ) இடைநிலைகள் ☐ ஆ) வேற்றுமையுருபுகள் ☐

இ) வினைச்சொற்கள் ☐ ஈ) உவமைஉருபுகள் ☐

11. பழந்தமிழர் வழிபட்ட தெய்வம்

அ) பிள்ளையார் ☐ ஆ) உருத்திரன் ☐

இ) முருகன் ☐ ஈ) இந்திரன் ☐

12. நிலமும் பொழுதும்

அ) முதற்பொருள் ☐ ஆ) உரிப்பொருள் ☐

இ) கருப்பொருள் ☐ ஈ) பருப்பொருள் ☐



TAMIL EDUCATION DEVELOPMENT COUNCIL தமிழர் கல்வி மேம்பாட்டுப் பேரவை TEDC

13. ஆறு + நீர்

அ) ஆறுநீர் ☐ ஆ) ஆற்றுனீர் ☐

இ) ஆற்றுநீர் ☐ ஈ) ஆற்றுணீர் ☐

14. எழுவரை வென்ற இளவல்

அ) செங்குட்டுவன் ☐ ஆ) நெடுஞ்செழியன் ☐

இ) கரிகாற்சோழன் ☐ ஈ) நெடுஞ்சேரலாதன் ☐

15. கிண்கிணி என்பது

அ) ஆரம் ☐ ஆ) காற்சலங்கை ☐

இ) வளையல் ☐ ஈ) தோடு ☐

16. பண்புத்தொகைக்கு ஓர் எடுத்துக்காட்டு

அ) செந்தாமரை ☐ ஆ) காலைமாலை ☐

இ) கொல்யானை ☐ ஈ) மதிமுகம் ☐

17. பதியெழு அறியாப் பழங்குடியினர்

அ) சிங்களவர் ☐ ஆ) ஆரியர் ☐

இ) பறங்கியர் ☐ ஈ) தமிழர் ☐

18. ஐ என்ற எழுத்தின் இனவெழுத்து

அ) ஊ ☐ ஆ) ஈ ☐

இ) உ ☐ ஈ) இ ☐

19. இடவாகுபெயருக்கு ஓர் எடுத்துக்காட்டு

அ) உலகம் பழிக்கும் செயலைச் செய்யாதே. ☐

ஆ) மஞ்சள் பூசி நீராடினாள். ☐

இ) நான் பொங்கல் உண்டேன். ☐

ஈ ) தலைக்கு 100 ஈரோ கொடு. ☐

20. ஆரியச்செல்வாக்கு அரசமட்டத்தில் நுழைந்த காலம்

அ) இடைக்கழகம் ☐ ஆ) கடைக்கழகம் ☐

இ) முதற்கழகம் ☐ ஈ ) முக்கழகம் ☐

21. சிறுபொழுதுகளில் ஒன்று

அ) இளவேனில் ☐ ஆ) முன்பனி ☐

இ) யாமம் ☐ ஈ ) கூதிர் ☐

22. பின்வருவனவற்றுள் வேறுபட்ட சொல்

அ) நிலவு ☐ ஆ) உலகம் ☐

இ) வையகம் ☐ ஈ ) பார் ☐

23. நற்பண்பு உள்ளவர்களை எல்லோரும் மதிப்பர். இச்சொல்லியத்தில் வேற்றுமை உருபேற்ற சொல்

அ) உள்ளவர்களை ☐ ஆ) நற்பண்பு ☐

இ) எல்லோரும் ☐ ஈ ) மதிப்பர் ☐

24. 'வன்சொல் யவனர் வளநாடு ஆண்ட' என்று கூறும் நூல்

அ) தொல்காப்பியம் ☐ ஆ) புறநானூறு ☐

இ) திருக்குறள் ☐ ஈ) சிலப்பதிகாரம் ☐

25. இரு சொற்கள் புணரும்போது மாற்றமின்றிப் புணரும் புணர்ச்சி

அ) இயல்பு ☐ ஆ) தோன்றல் ☐

இ) கெடுதல் ☐ ஈ) திரிதல் ☐

26. உயிர்நெடில் எழுத்துகள்

அ) 30 ☐ ஆ) 7 ☐

இ) 5 ☐ ஈ) 12 ☐

27. முட்செடி என்பதைப் பிரித்தால்

அ) முள் + செடி ☐ ஆ) முட் + செடி ☐

இ) முட்ச் + செடி ☐ ஈ) முட் + ச்செடி ☐

28. செயப்படுபொருளை உணர்த்துவது

அ) மூன்றாம்வேற்றுமை ☐ ஆ) ஏழாம் வேற்றுமை ☐

இ) இரண்டாம்வேற்றுமை ☐ ஈ) ஆறாம்வேற்றுமை ☐

29. வயலும் வயல் சார்ந்த இடமும்

அ) குறிஞ்சி ☐ ஆ) நெய்தல் ☐

இ) பாலை ☐ ஈ) மருதம் ☐

30. செயப்படுபொருள் குன்றிய வினை

அ) உண் ☐ ஆ) பார் ☐

இ) இரு ☐ ஈ) படி ☐

புள்ளிகள் 30



TAMIL EDUCATION DEVELOPMENT COUNCIL தமிழர் கல்வி மேம்பாட்டுப் பேரவை TEDC

2) பந்தியை வாசித்து; வினாக்களுக்கு முழுவிடை தருக.

கெவின் கார்டன். இவர் மிகச்சிறந்த ஒளிப்படப்பிடிப்பாளர். தன் ஒளிப்படக் கருவியில் ஏதாவது ஓர் அரிய படம் சிக்கி விடாதா? அது ஆயிரம் கதைகள் சொல்லாதா? என்ற ஏக்கத்திலே அவர் சுற்றித் திரிந்தார். அப்போதுதான் அங்கே ஒரு செய்தி அவர் காதில் ஒலிக்கிறது. சூடான் நாட்டில் கடும் பஞ்சம். மக்கள் செத்து மடிகிறார்கள். கெவின் கார்டன் தன் நண்பனுடன் சூடானில் கால் வைக்கிறார். பஞ்சத்தில் வாடும் மக்களின் நிலைமைகள் எல்லாவற்றையும் ஒளிப்படம் எடுத்தார். ஆனாலும் அவரின் மனம் அமைதியடையவில்லை. இன்னும் தேடிப்பார்ப்போம் என்று தேடுகின்றார். 1993 இல் சூடான் நாட்டில் ஐக்கிய நாடுகளின் உணவு வழங்கும் முகாம் முன்பு ஓர் உயிருள்ள பிணம் ஊர்ந்து செல்கிறது. கையிலே உணவு உண்ணும் தட்டு இருக்க, உடலிலே எலும்புகள் மட்டுமே மிஞ்ச, அந்த உயிர் உள்ள பிணம் மெல்ல ஊர்கிறது. அருமையான காட்சி என்று அவர் எண்ணினார். அந்தச் சிறுமிக்கு உணவு கிடைத்ததோ இல்லையோ? அவருக்கு அதைப்பற்றிக் கவலை இல்லை. தான் நினைத்து வந்தது நடக்கப்போகிறது. அந்தக்கணத்திலே கார்டனுக்கு எதிர்பாராத ஒரு வியப்பு. அந்தச் சிறுமியின் பின்னே ஓர் பிணம் தின்னும் கழுகு ஒன்றும் கார்டனைப் போலவே பதுங்கி நிற்கிறது. ஆம்! உலக வரலாற்றின் ஆயிரம் கதை சொல்லும் அந்த புகைப்படம் தயாரானது. கார்டனுக்கு மட்டற்ற மகிழ்ச்சி. அடுத்த கணமே, தன் நாடு திரும்பினார். யாராலும் எடுக்க இயலாத அந்த அற்புத ஒளிப்படத்தை எடுத்த வியப்பில் மூழ்கி, பாராட்டுகளுக்காக கார்டன் காத்துக் கிடந்தார். கார்டனுக்குப் பல தொலைபேசி அழைப்புகள் குவிந்தன. ஆனாலும் அனைவரும் கேட்ட கேள்வி அந்தச் சிறுமி என்ன ஆனாள்? அவள் உயிர் தப்பினாளா? இந்தக்கேள்விக்கு கார்டனிடம் பதில் இல்லை. சில நாட்கள் செல்ல கார்டனுக்கு நோபல் பரிசுக்கு நிகரான புலிட்சர் என்ற விருது கிடைத்தது. அரங்கம் அதிர்ந்தது. ஆயினும் அவன் முகத்தில் சிரிப்பு இல்லை. அந்தப் பிணம் தின்னும் கழுகிற்கும் எனக்கும் என்ன வேறுபாடு என்று அவன் மனம் கவலைப்பட்டது. அந்தச் சிறுமிக்கு ஒரு வாய் தண்ணீர் கொடுத்து உயிரைக் காப்பாற்றி இருக்கலாம் அல்லது தனது வலுவான கைகளினால் அந்தச் சிறுமியைத் தூக்கிச் சென்று உணவளிக்கும் அமைப்பு அலுவலகத்தின் வாயிலிலாவது சேர்த்து இருக்கலாம்.

கல்லெடுத்து வீசி அந்தக் கழுகையாவது விரட்டி இருக்கலாம். ஆனால் இவற்றில் எதையும் செய்யாமல் வெறும் ஒரு படத்தை எடுத்து அதிக விலைக்கு விற்றேனே! என்று மனம் வருந்தினார். கவலையின் உச்சத்தில் காவல்துறைக்கு ஒரு கடிதம் எழுதி வைத்து விட்டு கடற்கரையில் அவர் பிணமாகக் கிடந்தார். அக் கடிதத்தில் சில வரிகளே இருந்தன. ''என்னை உண்மையாக மன்னியுங்கள். நான் செய்த தவறு போல் நீங்களும் தவறு செய்யாதீர்கள். எந்த நிலை வரினும் உங்கள் மாந்த நேயத்தை தொலைத்து விலங்கு நிலை ஆகாதீர்கள். மாந்த நேயத்துடன் வாழுங்கள்.''

1. உயிருள்ள பிணம் எவ்வாறு காணப்பட்டது?

___

___

2. கார்டன் மக்களுக்கு கூறிய செய்தி என்ன?

___

___

3. எந்த நாட்டில் கடும் பஞ்சம் நிலவியது?

___

4. கார்டன் எதற்காக ஏங்கினார்?

___

___

5. இவர் மனம் வருந்தியது ஏன்?

___

___

___

___

புள்ளிகள் 10

TAMIL EDUCATION DEVELOPMENT COUNCIL
தமிழர் கல்வி மேம்பாட்டுப் பேரவை
TEDC

**3) பாடநூல் வினாக்கள் ஏழினுள் ஐந்திற்கு மட்டும் விடை தருக.**

1. ‘ஆவும் ஆனியற் பார்ப்பன மக்களும்’ இப்பாடலைப் பாடியவர்?

2. குமரிமுனை தொடக்கம் இமயம் வரையுள்ள பகுதி எவ்வாறு அழைக்கப்பட்டது?

3. வீரத்தின் உயர்நிலை எது?

4. கிழக்கில் இருந்து வீசும் காற்றின் பெயர் என்ன?

5. ஆரியரால் மறைத்து வைக்கப்பட்ட தமிழரது நூல்கள் எவை?

6. கரிகாற்பெருவளத்தானும் பெருஞ்சேரலாதனும் போர் புரிந்த இடம் எது?

7. சிந்துவெளியில் இருந்த இருபெரும் நகரங்கள் எவை?

புள்ளிகள் 10

**4) பத்து வரிகளுக்குக் குறையாமல் படத்தைப் பார்த்துக் கவிதை எழுதுக, அல்லது கீழுள்ள கவிதையைத் தொடர்ந்து எழுதுக.**



மே 18 நாங்கள் அழுவதற்கு அல்ல
ஆண்ட இனம் மீண்டும் எழுவதற்கு

புள்ளிகள் 10

**5) இலக்கண / மொழியியல் வினாக்கள் அனைத்திற்கும் விடை தருக.**

**1. தரப்பட்டுள்ள இடைச்சொற்களின் வகைகளைத் தருக.**

1. கிறு,கின்று ______________________
2. அத்து, அற்று ______________________
3. தோறும், தான் ______________________

**2. 1. உயிர்முன் உயிர் புணர்தல் என்றால் என்ன?**

______________________________________________

______________________________________________

2. உயிர்முன் உயிர் புணர்தலுக்கு இரண்டு எடுத்துக்காட்டுகள் தருக.

______________________________________________

______________________________________________

**3. பின்வரும் வேற்றுமை உருபுகள் இடம்பெறுமாறு சொல்லியம் எழுதுக.**

1. 4ஆம் வேற்றுமை ______________________
2. 6ஆம் வேற்றுமை ______________________

**4. பின்வருவனவற்றுக்கு எடுத்துக்காட்டுகள் தருக.**

1. உருவக அணி ______________________
2. குறிப்புவினை ______________________
3. பொதுமொழி ______________________

**5. பின்வரும் வினைச்சொற்களின் வினையடிகளையும் காலத்தையும் தருக.**

| | வினையடி | காலம் |
|---|---|---|
| காண்பான் | ____________ | ____________ |
| விற்கின்றாள் | ____________ | ____________ |
| பெற்றனர் | ____________ | ____________ |

புள்ளிகள் 15



TAMIL EDUCATION DEVELOPMENT COUNCIL தமிழர் கல்வி மேம்பாட்டுப் பேரவை TEDC

6) பந்தியை வாசித்து, மூன்றில் ஒரு பகுதியாகச் சுருக்கி எழுதுக

இவ்வுலகிலேயே எமக்குக் கெடுதல் இன்றி நாம் நல்வாழ்வு வாழ வேண்டும் என்ற நோக்கில் எம்மைப் பெற்று வளர்ப்பவர்கள் எம் பெற்றோரே. உண்ணாமல் உறங்காமல் தமது விருப்புகளை எல்லாம் புறந்தள்ளி விட்டு, பிள்ளைகளின் நலனுக்காகவே வாழ்பவர்கள் பெற்றோர்கள். காக்கைக்கும் தன் குஞ்சு பொன் குஞ்சு போல தம் பிள்ளைகளே தமக்குப் பெருஞ்செல்வம் என எண்ணி எம்மை வளர்த்து ஆளாக்கிய எம் பெற்றோர்களை நாம் இறுதிவரை காக்க வேண்டும். நம் தாய் தந்தைக்கு நிகராக இவ்வுலகில் யாரும் இருக்கமுடியாது. தங்கள் வாழ்நாள் முழுவதுமே பிள்ளைகளின் நலனுக்காய் வாழ்ந்த பெற்றோர்கள் முதுமைப் பருவத்தை அடைந்ததும் அவர்களது உடல்நிலை வலுவிழந்து செயல் இழந்து போகும் நிலையில் அவர்களை மதிக்காது ஒதுக்கி விடுகின்றனர் இன்றைய இளையோர் பலர். அல்லது அவர்களை முதியோர் இல்லங்களுக்கு அனுப்பிவிடுகின்றனர். அவர்களுக்குப் பணம் மட்டும் கொடுத்தால் போதும் என்று எண்ணுகின்றனர். இது முற்றிலும் தவறாகும். எமக்காக வாழ்ந்த எம் பெற்றோருக்கு நாம் செய்கின்ற கடமை அவர்களது மனம் நோகாமல் நடந்துகொள்வதே. எனவே, நாம் ஒவ்வொருவரும் நமது பெற்றோரைப் பேணுவோம்.

**சுருக்கத்திற்கான குறிப்புகள்:**

- தரப்பட்டுள்ள பந்தியை மீண்டும் மீண்டும் வாசித்து விளங்கிக் கொள்ளல்.
- அதன் உட்கருத்தை அறிதல்.
- உவமைகளையும் எடுத்துக்காட்டுகளையும் கூறியது கூறலையும் தவிர்த்தல்.
- எடுக்கப்பட்ட குறிப்புகளைத் தொகுத்து எழுதுதல்.

புள்ளிகள் 05

TAMIL EDUCATION DEVELOPMENT COUNCIL
தமிழர் கல்வி மேம்பாட்டுப் பேரவை
TEDC

**7) தரப்பட்டுள்ள தலைப்புகளில் ஒன்றைத் தெரிவுசெய்து 200 சொற்களுக்குக் குறையாமல் கட்டுரை எழுதுக.**

- ✸ தமிழர் வீரம்
- ✸ எமது விடுதலைப் போராட்டமும் மாவீரர்களும்
- ✸ புலம்பெயர் தேசத்தில் தமிழ்மொழிக்கல்வி

புள்ளிகள் 20

TAMIL EDUCATION DEVELOPMENT COUNCIL
தமிழர் கல்வி மேம்பாட்டுப் பேரவை
TEDC

TAMIL EDUCATION DEVELOPMENT COUNCIL
தமிழர் கல்வி மேம்பாட்டுப் பேரவை
TEDC